لَوْ لَآ اَنْ تَدٰرَكَهٗ نِعْمَةٌ مِّنْ رَّبِّهٖ لَنُبِذَ بِالْعَرَآءِ وَهُوَ مَذْمُوْمٌ ﴿٤٩﴾
فَاجْتَبٰهُ رَبُّهٗ فَجَعَلَهٗ مِنَ الصّٰلِحِيْنَ ﴿٥٠﴾ وَاِنْ يَّكَادُ الَّذِيْنَ
كَفَرُوْا لَيُزْلِقُوْنَكَ بِاَبْصَارِهِمْ لَمَّا سَمِعُوا الذِّكْرَ وَيَقُوْلُوْنَ اِنَّهٗ
لَمَجْنُوْنٌ ﴿٥١﴾ وَمَا هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَ ﴿٥٢﴾ ع

سُوْرَةُ الْحَآقَّةِ مَكِّيَّةٌ وَّهِيَ اثْنَتَانِ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَآقَّةُ ﴿١﴾ مَا الْحَآقَّةُ ﴿٢﴾ وَمَآ اَدْرٰىكَ مَا الْحَآقَّةُ ﴿٣﴾
كَذَّبَتْ ثَمُوْدُ وَعَادٌۢ بِالْقَارِعَةِ ﴿٤﴾ فَاَمَّا ثَمُوْدُ فَاُهْلِكُوْا
بِالطَّاغِيَةِ ﴿٥﴾ وَاَمَّا عَادٌ فَاُهْلِكُوْا بِرِيْحٍ صَرْصَرٍ عَاتِيَةٍ ﴿٦﴾
سَخَّرَهَا عَلَيْهِمْ سَبْعَ لَيَالٍ وَّثَمٰنِيَةَ اَيَّامٍ حُسُوْمًا
فَتَرَى الْقَوْمَ فِيْهَا صَرْعٰى كَاَنَّهُمْ اَعْجَازُ نَخْلٍ خَاوِيَةٍ ﴿٧﴾
فَهَلْ تَرٰى لَهُمْ مِّنْۢ بَاقِيَةٍ ﴿٨﴾ وَجَآءَ فِرْعَوْنُ وَمَنْ قَبْلَهٗ
وَالْمُؤْتَفِكٰتُ بِالْخَاطِئَةِ ﴿٩﴾ فَعَصَوْا رَسُوْلَ رَبِّهِمْ
فَاَخَذَهُمْ اَخْذَةً رَّابِيَةً ﴿١٠﴾ اِنَّا لَمَّا طَغَا الْمَآءُ حَمَلْنٰكُمْ
فِى الْجَارِيَةِ ﴿١١﴾ لِنَجْعَلَهَا لَكُمْ تَذْكِرَةً وَّتَعِيَهَآ اُذُنٌ وَّاعِيَةٌ ﴿١٢﴾

49. அவருடைய இரட்சகனிடமிருந்து அருட்கொடை அவரை அடையாதிருந்தால், வெட்ட வெளியில் பழிக்கப்பட்டவராக அவர் எறியப்பட்டு இருந்திருப்பார்.

50. பின்னர், அவருடைய இரட்சகன் அவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்; பின்னர் அவரை நல்லோர்களில் உள்ளவராக ஆக்கிவைத்தான்.

51. மேலும், (நபியே!) நிராகரிப்போர் (குர்ஆனுடைய) உபதேசத்தைக் கேட்கும் பொழுது, அவர்கள் தங்களுடைய பார்வைகளைக் கொண்டே உம்மை வீழ்த்தி விட நெருங்குகின்றனர்; (உம்மைப் பற்றி) நிச்சயமாக, அவர் பைத்தியக்காரர் (தாம்) என்றும் கூறுகின்றனர்.

52. (நாம் உம்மீது இறக்கிவைத்திருக்கும் திக்ரு எனும்) இது, அகிலத்தார்க்கு உபதேசமே தவிர (வேறு) இல்லை.

---

அத்தியாயம் : 69

## அல் ஹாக்கா _ நிச்சயமானது

வசனங்கள் : 52 மக்கீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. உறுதியாக நடந்தேறக்கூடியதா(ன மறுமை நாளா)னது_

2. உறுதியாக நடந்தேறக்கூடியது என்ன?

3. உறுதியாக நடந்தேறக்கூடியது என்னவென்று உமக்கு எது அறிவித்தது?

4. ஸமூது(கூட்டத்தினரு)ம், ஆது(கூட்டத்தினரு)ம் (இதயங்களைத்) திடுக்கிடச்செய்யக் கூடியதை (மறுமைநாளை)ப் பொய்யாக்கினர்.

5. ஆகவே, (ஸாலிஹ் நபியின் கூட்டத்தாராகிய) ஸமூது, ஒரு பெரிய சப்தத்தைக்கொண்டு அழிக்கப்பட்டனர்.

6. இன்னும், (ஹூது நபியின் கூட்டத்தாராகிய) ஆது, பெரும் சப்தத்தோடு கடுங்குளிர் கலந்த கொடுங்காற்றைக் கொண்டு அழிக்கப்பட்டனர்.

7. ஏழு இரவுகளும், எட்டு பகல்களும் தொடர்ச்சியாக அவர்கள் மீது அதை அவன் வசப்படுத்தி (வீசச்செய்து) இருந்தான்; ஆகவே, (நபியே! அப்பொழுது நீர் அங்கிருந்திருப்பின்) அவற்றில் அக்கூட்டத்தினரை_ நிச்சயமாக அவர்கள், அடிப்பாகங்களோடு சாய்ந்து கிடக்கும் ஈச்ச மரங்களைப் போன்று பிணங்களாக(க் கிடப்பதை) நீர் காண்பீர்.

8. ஆகவே, (இன்றைக்கும்) அவர்களில் எஞ்சியிருப்போரை நீர் காண்கின்றீரா?

9. மேலும், ஃபிர்அவ்னும், அவனுக்கு முன்னிருந்தவர்களும், தலை கீழாய்ப் புரட்டப்பட்ட ஊரிலிருந்தவர்களும் (இணைவைத்து அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரித்துப்) பாவச்செயலைச் செய்து வந்தார்கள்.

10. ஆகவே, அவர்கள் தங்கள் இரட்சகனின் தூதருக்கு மாறு செய்தனர்; ஆகையால், அவன் அவர்களை மிகக் கடுமையான பிடியாகப் பிடித்துக் கொண்டான்.

11. தண்ணீர் எல்லை மீறிய(தால்பெருக்கெடுத்து ஓடிய) பொழுது, நிச்சயமாக நாம் உங்(கள் முன்னோர்)களைக் கப்பலில் ஏற்றி(க்காப்பாற்றி)னோம்.

12. அதனை உங்களுக்கு ஒரு படிப்பினையாக நாம் ஆக்குவதற்காகவும், பேணிப்பாதுகாக்கும் செவி, அதனை (க்கேட்ட பின் நினைவில் வைத்து)பேணிப் பாதுகாப்பதற்காகவும் (அவ்வாறு செய்தோம்).

فَاِذَا نُفِخَ فِي الصُّوْرِ نَفْخَةٌ وَّاحِدَةٌ ﴿۱۳﴾ وَّحُمِلَتِ الْاَرْضُ وَ
الْجِبَالُ فَدُكَّتَا دَكَّةً وَّاحِدَةً ﴿۱۴﴾ فَيَوْمَئِذٍ وَّقَعَتِ الْوَاقِعَةُ ﴿۱۵﴾
وَانْشَقَّتِ السَّمَآءُ فَهِيَ يَوْمَئِذٍ وَّاهِيَةٌ ﴿۱۶﴾ وَّالْمَلَكُ عَلٰٓى اَرْجَآئِهَا
وَيَحْمِلُ عَرْشَ رَبِّكَ فَوْقَهُمْ يَوْمَئِذٍ ثَمٰنِيَةٌ ﴿۱۷﴾ يَوْمَئِذٍ
تُعْرَضُوْنَ لَا تَخْفٰى مِنْكُمْ خَافِيَةٌ ﴿۱۸﴾ فَاَمَّا مَنْ اُوْتِيَ
كِتٰبَهٗ بِيَمِيْنِهٖ فَيَقُوْلُ هَآؤُمُ اقْرَءُوْا كِتٰبِيَهْ ﴿۱۹﴾ اِنِّيْ
ظَنَنْتُ اَنِّيْ مُلٰقٍ حِسَابِيَهْ ﴿۲۰﴾ فَهُوَ فِيْ عِيْشَةٍ رَّاضِيَةٍ ﴿۲۱﴾
فِيْ جَنَّةٍ عَالِيَةٍ ﴿۲۲﴾ قُطُوْفُهَا دَانِيَةٌ ﴿۲۳﴾ كُلُوْا وَاشْرَبُوْا
هَنِيْٓئًا بِمَآ اَسْلَفْتُمْ فِي الْاَيَّامِ الْخَالِيَةِ ﴿۲۴﴾ وَاَمَّا مَنْ
اُوْتِيَ كِتٰبَهٗ بِشِمَالِهٖ فَيَقُوْلُ يٰلَيْتَنِيْ لَمْ اُوْتَ كِتٰبِيَهْ ﴿۲۵﴾
وَلَمْ اَدْرِ مَا حِسَابِيَهْ ﴿۲۶﴾ يٰلَيْتَهَا كَانَتِ الْقَاضِيَةَ ﴿۲۷﴾ مَآ
اَغْنٰى عَنِّيْ مَالِيَهْ ﴿۲۸﴾ هَلَكَ عَنِّيْ سُلْطٰنِيَهْ ﴿۲۹﴾ خُذُوْهُ
فَغُلُّوْهُ ﴿۳۰﴾ ثُمَّ الْجَحِيْمَ صَلُّوْهُ ﴿۳۱﴾ ثُمَّ فِيْ سِلْسِلَةٍ ذَرْعُهَا
سَبْعُوْنَ ذِرَاعًا فَاسْلُكُوْهُ ﴿۳۲﴾ اِنَّهٗ كَانَ لَا يُؤْمِنُ
بِاللّٰهِ الْعَظِيْمِ ﴿۳۳﴾ وَلَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ﴿۳۴﴾

13. ஆகவே, குழல்(ஸூர்) ஒரு முறை ஊதப்பட்டால்_

14. பூமியும், மலைகளும் உயர்த்தப்பட்டு, அவ்விரண்டும் ஒரே தூளாக தூளாக்கப்பட்டுவிட்டால்;

15. அந்நாளில் நிகழவேண்டியது நிகழ்ந்து விடும்.

16. வானமும் பிளந்து, அது அந்நாளில் பலமற்றதாகிவிடும்.

17. இன்னும், (நபியே!) மலக்குகள் அதன் கடைக்கோடிகளில் இருப்பார்கள்; அன்றியும், அந்நாளில் உமதிரட்சகனின் அர்ஷை, (மலக்குகளில்) எட்டுப்பேர் தங்களுக்கு மேலாகச் சுமந்து கொண்டிருப்பார்கள்.

18. (மனிதர்களே!) அந்நாளில் நீங்கள் (உங்கள் இரட்சகன் முன்) எடுத்துக் காட்டப்படுவீர்கள்; உங்களிலிருந்து மறையக்கூடியது எதுவும் (அவனுக்கு) மறைந்துவிடாது.

19. ஆகவே, எவர், தன்னுடைய பதிவுப்புத்தகத்தை வலக்கையில் கொடுக்கப்பட்டாரோ அவர், (மற்றவர்களிடம்) "வாருங்கள்; என்னுடைய பதிவுப் புத்தகத்தை நீங்கள் படித்துப்பாருங்கள்" என்று (மகிழ்ச்சியுடன்) கூறுவார்.

20. "நிச்சயமாக நான் என்னுடைய கேள்வி கணக்கை நிச்சயமாக சந்திப்பேன் என்று உறுதியாக எண்ணியிருந்தேன்" (என்றும் கூறுவார்).

21. ஆகவே, அவர் திருப்தியான வாழ்வில் இருப்பார்.

22. உயர்வான சுவனத்தில் இருப்பார்.

23. அதன் கனிகள் (அவர்களின் கைக்கெட்டும் விதமாக பறிப்பதற்கு மிக) நெருங்கியவையாக இருக்கும்.

24. (இவர்களிடம்,) "சென்று போன நாட்களில் (உலகில் மறுமைக்காக நன்மையானவற்றை) நீங்கள் முற்படுத்தி வைத்திருந்த காரண த்திற்காக, மகிழ்வோடு (இவைகளை) உண்ணுங்கள்; இன்னும், அருந்துங்கள்" (என்று கூறப்படும்).

25. இன்னும், எவன் தன்னுடைய (பதிவுப்) புத்தகத்தை இடக்கையில் கொடுக்கப்பட்டானோ அவன், "என்னுடைய (செயல்கள் பதியப்பட்ட) புத்தகத்தை நான் கொடுக்கப்படாமலிருந்திருக்க வேண்டுமே!" என்று கூறுவான்.

26. மேலும், "என்னுடைய கணக்கு என்னவென்பதை நான் அறியவில்லையே!"

27. (நான் இறந்தபின் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படாது) "அதுவே முடிவாக இருந்திருக்க வேண்டுமே!"

28. "என்னுடைய செல்வம் எனக்கு ஒன்றும் பயனளிக்கவில்லையே!"

29. "என்னுடைய அதிகாரமும் என்னை விட்டு அழிந்துவிட்டதே!" (என்று புலம்புவான்.)

30. பின்னர், (வல்ல அல்லாஹ் தன் மலக்குகளுக்கு) "அவனைப் பிடியுங்கள்; அப்பால் அவனுக்கு விலங்கிடுங்கள்;"

31. "பின்னர் நரகத்தில் அவனைத் தள்ளுங்கள்."

32. "பின்னர், அதன் நீளமானது எழுபது முழமுள்ள(தாக இருக்கும்) சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" (என்றும் கூறுவான்)

33. "நிச்சயமாக அவன், மகத்துவமிக்க அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாதவனாக அவன் இருந்தான்."

34. "ஏழைக்கு (தான் ஆகாரமளிக்காததுடன் பிறரையும்) ஆகாரமளிக்கும்படி அவன் தூண்டவுமில்லை."

فَلَيْسَ لَهُ الْيَوْمَ هٰهُنَا حَمِيْمٌ ﴿٣٥﴾ وَّلَا طَعَامٌ اِلَّا مِنْ
غِسْلِيْنٍ ﴿٣٦﴾ لَّا يَاْكُلُهٗۤ اِلَّا الْخٰطِـُٔوْنَ ﴿٣٧﴾ فَلَاۤ اُقْسِمُ بِمَا ع ٣
تُبْصِرُوْنَ ﴿٣٨﴾ وَمَا لَا تُبْصِرُوْنَ ﴿٣٩﴾ اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ
كَرِيْمٍ ﴿٤٠﴾ وَّمَا هُوَ بِقَوْلِ شَاعِرٍ ؕ قَلِيْلًا مَّا تُؤْمِنُوْنَ ﴿٤١﴾
وَلَا بِقَوْلِ كَاهِنٍ ؕ قَلِيْلًا مَّا تَذَكَّرُوْنَ ﴿٤٢﴾ تَنْزِيْلٌ مِّنْ
رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿٤٣﴾ وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ﴿٤٤﴾
لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ﴿٤٥﴾ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ﴿٤٦﴾ فَمَا
مِنْكُمْ مِّنْ اَحَدٍ عَنْهُ حٰجِزِيْنَ ﴿٤٧﴾ وَاِنَّهٗ لَتَذْكِرَةٌ لِّلْمُتَّقِيْنَ ﴿٤٨﴾
وَاِنَّا لَنَعْلَمُ اَنَّ مِنْكُمْ مُّكَذِّبِيْنَ ﴿٤٩﴾ وَاِنَّهٗ لَحَسْرَةٌ عَلَى الْكٰفِرِيْنَ ﴿٥٠﴾
وَاِنَّهٗ لَحَقُّ الْيَقِيْنِ ﴿٥١﴾ فَسَبِّحْ بِاسْمِ رَبِّكَ الْعَظِيْمِ ﴿٥٢﴾ ع ٢

## سُوْرَةُ الْمَعَارِجِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعٌ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

سَاَلَ سَآئِلٌۢ بِعَذَابٍ وَّاقِعٍ ﴿١﴾ لِّلْكٰفِرِيْنَ لَيْسَ
لَهٗ دَافِعٌ ﴿٢﴾ مِّنَ اللّٰهِ ذِى الْمَعَارِجِ ﴿٣﴾ تَعْرُجُ الْمَلٰٓئِكَةُ وَ
الرُّوْحُ اِلَيْهِ فِىْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗ خَمْسِيْنَ اَلْفَ سَنَةٍ ﴿٤﴾

35. " ஆகவே இன்றையத் தினம் அவனுக்கு இங்கு (உதவ) நண்பன் (எவனும்) இல்லை.

36. (நரகவாசிகளின் உடலிலிருந்து வடியும்) "சீழ் ஜலங்களைத் தவிர, (அவனுக்கு வேறு) உணவுமில்லை" (என்றும் கூறப்படும்.)

37. அதனைப்பாவிகளைத் தவிர (மற்றெவரும்) புசிக்கமாட்டார்கள்.

38. ஆகவே, நீங்கள் பார்ப்பவற்றைக் கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.

39. நீங்கள் பார்க்காதவற்றைக்கொண்டும்; (நான் சத்தியம் செய்கிறேன்.)

40. நிச்சயமாக, இது மிக்க சங்கைமிக்கஒரு தூதரின் கூற்றாகும்.

41. இது எந்தக் கவிஞரின் கூற்றுமல்ல; (எனினும், இதனை) நீங்கள் வெகு சொற்பமாகவே விசுவாசிக்கின்றீர்கள்_

42. (இது) ஒரு குறிகாரரின் கூற்றுமல்ல; (எனினும்,) வெகு சொற்பமாகவே நீங்கள் நல்லறிவு பெறுகின்றீர்கள்.

43. அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து (இது) இறக்கப்பட்டுள்ளதாகும்.

44. இன்னும், அவர் நம்மீது சொற்களில் (நாம் சொல்லாத) சிலவற்றை இட்டுக்கட்டி (க்கூறி)யிருப்பாரானால்_

45. திட்டமாக அவருடைய வலக்கரத்தை நாம் பலமாகப் பிடித்துக் கொண்டிருப்போம்.

46. பின்னர், அவருடைய (இதயத்தோடுசம்பந்தப்பட்ட) உயிர் நரம்பை நாம் தறித்துவிடுவோம்.

47. அப்போது, உங்களில் அவரை விட்டும் (நாம் செய்யும் வேதனையை) தடுத்து விடக்கூடியவர்கள் எவருமிலர்.

48. மேலும், நிச்சயமாக (குர்ஆனாகிய) இது பயபக்தியுடையோர்களுக்கு நல்லுபதேசமாகும்.

49. நிச்சயமாக (அதனைப்) பொய்யாக்குகிறவர்களும் உங்களில் இருக்கின்றனர் என்பதை நிச்சயமாக நாம் நன்கறிவோம்.

50. மேலும், நிச்சயமாக இது நிராகரிப்போருக்குக் கைசேதமாகும்.

51. இன்னும் நிச்சயமாக இது, உறுதியான உண்மையாகும்.

52. ஆகவே, (நபியே!) நீர் மகத்தான உமதிரட்சகனின் பெயரைக்கொண்டு துதிசெய்துகொண்டிருப்பீராக!

---

அத்தியாயம் : 70

## அல் மஆரிஜ் _ உயர் வழிகள்

வசனங்கள் : 44 மக்கீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நிகழக் கூடிய வேதனைபற்றிக் கேட்கக் கூடியவன் (எப்பொழுது வருமென பரிகசிக்கும் நோக்குடன்) கேட்கின்றான்.

2. நிராகரிப்போருக்கு_(அது நிகழும் சமயத்தில்) அதனைத் தடுத்து விடக்கூடியவர் எவருமில்லை.

3. உயர் வழிகளுடைய அல்லாஹ்விடமிருந்து (அது சம்பவிக்கும்).

4. மலக்குகளும், ஜிப்ரீலும் (அல்லாஹ்வாகிய) அவன் பக்கம் ஒரு நாளில் உயர்ந்து செல்வார்கள்; அதன் அளவு ஐம்பதினாயிரம்வருடங்களாகும்.